**மஹாஓயா பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹாஓயா பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மஹாஓயா வாராந்த சந்தையின் மலசலகூட முறைமை மற்றும் 02 மோட்டார் வாகனத் தளங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 4,456,010 தொகை நிலையான சொத்தாக கணக்கீடு செய்யபட்டவில்லை.

(ஆ) சபையினால் 2015ஆம் ஆண்டின் போது கெக்கிரிக்கேன கடைத் தொகுதி, நூலக பக்கச் சுவர் மற்றும் சுடுதண்ணீர் அடுப்பு மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 9,750,775 தொகை நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்படாதிருந்தமையினால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்திலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது வாகன பழுதுபார்த்தலுக்கான டயர், ரியுப் மற்றும் பற்றரி தொடர்பாக செலவிடப்பட்ட ரூபா 261,800 தொகையான செலவினம் நிலையான சொத்தாக மூலதனமாக்கப்படாமையினால் ஆண்டின் செயற்பாட்டு இலாபம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு 2014 மார்ச் 30ம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டி மீதியில் 2016ம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 105,488 தொகை மீளாய்வாண்டில் வட்டிச் செலவினமாக சீராக்கப்படாமையினால் செயற்பாட்டு மிகை அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டடிருந்தது.

(உ) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தில் ரூபா 5,805,457 மீதியில் ரூபா 147,347 நடைமுறைப் பொறுப்பாகவும், ரூபா 5,658,110 தொகை நடைமுறையல்லாப்

பொறுப்பாகவும் வகைப்படுத்தப்படாமல் மொத்தக்கடன் மீதியும் நடைமுறையல்லாப் பொறுப்பாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31ல் உள்ளவாறு புறநெகும செயல்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 02 செயற்திட்டங்களுக்குரியதாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,636,060 தொகை வேலைக்கடன் கொடுத்தோர் மீதியாக காண்பிக்கப்படாமையினால் நடைமுறைப் பொறுப்புகள் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) சபையினால் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய 2013ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரையான முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 281,912 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 230,100 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 51,812 தொகையான நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பிரதேச சபை விதி 180 | காசு, களஞ்சியம் மற்றும் நடவடிக்கைகளில் பொறுப்பாக செயற்படுகின்ற மூன்று உத்தியோகத்தர்களினால் பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம். 1647உ | வாகணங்களின் வகை. அலங்காரம். பதிவு இலக்கம், தமக்கு கையளிக்கப்பட்ட திகதி, பொறுப்பளித்த திகதி மற்றும் அது தொடர்பான தகவல்களை காண்பிக்கின்ற மோட்டார் வாகன பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | சபைக்குச் சொந்தமாக 07 கணனிகள் காணப்பட்ட போதிலும், சபையினால் கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வேலை நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 6,777,757 மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,935,959 தொகை மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 2,841,798 அதிகரிப்பை காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வீதவரியும், வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும், ஏனைய உதவிக் கட்டணங்கள் போன்ற வருமான மூலங்களில் 0.02 சதவீதம் முதல் 36 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், ஏனைய வருமானங்களில் 11 சதவீத குறைவையும் காண்பித்தது.

மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்களை பழுதுபார்த்தல், வழங்கலும் உபகரணங்கள் என்ற மூலங்களில் 19 சதவீதம் முதல் 46 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும் சம்பளமும் படிகளும், பிரயாணச் செலவினம் மற்றும் போக்குவரத்து, தொடர்பாடல், வட்டி செலுத்துதல், உதவிப் பணம், ஓய்வூதியம் போன்ற செலவின மூலங்களில் 04 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையிலான வீச்சில் வீழ்ச்சியினையும் காண்பித்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்.

| வருமான விடயம் | 2016 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2016ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| வீத வரியும், வரியும் | 60,000 | 61,000 | -- |
| வாடகை வருமானம். | 5,928,850 | 5,929,702 | 352,500 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம். | 505,000 | 408,530 | -- |
| சேவைகளுக்கான கட்டணம் | 3,210,000 | 4,450,653 | -- |
| தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும். | 606,000 | 1,765,473 | 231,333 |
| ஏனைய வருமானம். | 252,500 | 248,223 | 136,795 |
| ஏனைய மானியம் | 17,427,528 | 13,260,641 | -- |

**2.3.2 வீதவரியும் வரியும்**

மஹாஓயா பிரதேச சபை அதிகார பிரதேசம் தேவையான அடிப்படை வசதிகளுடன் கூடிய பிரதேசமாக இருந்த போதிலும், சபையினால் இதுவரைக்கும் வீதவரி அறவிடல் இடம்பெறாதிருந்ததுடன் ஆதன வரிக்காக மதிப்பீடொன்றையும் பெற்றுக்கொள்வதற்கு விலை மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 ஏனைய வருமானம்**

அ. சபை அதிகாரப் பிரதேசத்தில் 07 தொலைபேசிக் கோபுரங்கள் காணப்பட்ட போதிலும் 2009 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் தொலைபேசி கோபுரங்களுக்காக ஆகக் குறைந்தது ஒரு கோபுரத்திற்கு ரூபா 20,000 வீதம் ரூபா 140,000 ஆரம்பக் கட்டணமொன்று அறவிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் சபையினால் அக்கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

ஆ. மீளாய்வாண்டின் செப்தெம்பர் முதல் இதுவரை மோட்டார் வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3.4 முத்திரைக் கட்டணம்**

பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணமாக 2015 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 104,795 அறவிடவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 5 வருடங்களுக்கு முன்னர் சபையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய முற்பணமாக செலுத்தப்பட ரூபா 162,274 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 5 வருடங்களுக்கு முன் நலன்புரிச்சங்கத்திற்கான கொடுப்பனவு செய்யும் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 15,070 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2013ம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய முத்திரைக்கட்டணமான ரூபா 230,100 செலுத்தப்படவில்லை.

(ஈ) 06 உத்தியோகத்தர்களிடமிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 25,359 தொகையான ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் உரிய திகதியில் உள்ளவாறு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் தண்டப்பணமாக ரூபா 3,000 செலுத்தவேண்டியிருந்தது.

ஆ. 2012ம் ஆண்டு முதல் ரூபா 33,083,469 தொகை செலவினம் நிர்மாணிக்கப்பட்ட கெக்ரிஹேன சந்தை தொகுதி 2016 நவம்பர் 10 ஆம் திகதி ஒப்பந்தக்காரரினால் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இலக்கிடப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.1இன் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு ஒப்பந்தத்தை கையளிக்கும் போது தற்போது கையளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களில் எஞ்சிய பகுதியின் மொத்த பெறுமதி மற்றும் உத்தேச ஒப்பந்தங்களின் கூட்டு மொத்தம் ரூபா 02 மில்லியனை விஞ்ச முடியாதிருந்த போதிலும் சபையினால் சனசமூக சபை ஒன்றிற்கு ரூபா 3,138,332 பெறுமதியான 02 ஒப்பந்தங்கள் 2016 ஆகஸ்ட் 01 ஆம் திகதி 2016 செப்டம்பர் 05 ஆம் திகதி என்ற கால எல்லையில் வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 02 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | சொத்துக்களை கணக்கீடுகளுக்கு கொண்டுவருதல் |
| (ஆ) வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானத்தை அறவிடல் |
| | ii. உப விதிகளை விதித்தல் |
| | iii. வருமான மூலங்களை இனங்காணல் |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | சுற்றறிக்கையின் பிரகாரம் வேலைகளை நிறைவேற்றுதல். |
| (ஈ) களஞ்சிய நிர்வாகம் | உடனடியாக சரி பிழைகளை பார்க்கக்கூடிய வகையில் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் |
| (உ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை கையேற்றல் |